
வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் வெளியீடு

யாழ்ப்பாணம், 1968 புரட்டாதி

REVENUE CEYLON 0.05

Appropriate Technology Service
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No

# ஐக்கிய தீபம்



இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தினைப் பெருமைப்படுத்தும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்கங்கட்குத் தேவையான புத்தகங்களும் பத்திரங்களும்

கீழே காட்டப்பட்டிருக்கும் பட்டியலிலுள்ள புத்தகங்களும், பத்திரங்களும் எங்களிடம் விற்பனைக்கிருக்கின்றன. தங்கள் தேவைகளை எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

| | | | ரூபா-சதம் |
|---|---|---|---|
| 1. | கடன் மனுப்பத்திரம் | ... ... | -03 |
| 2. | கடன் முறி | ... ... | -03 |
| 3. | மத்தியஸ்தர் மனு | ... ... | -03 |
| 4. | கேள்விப் பத்திரம் | ... ... | -03 |
| 5. | அங்கத்தவர் பாஸ்புத்தகம (நாணய சங்கம்) | | -25 |
| 6. | ப. நோ. கூ. ச. ,, | ... ... | -50 |
| 7. | அங்கத்தவர் பேரேடு | ... | 7-25 |
| 8. | பொதுப் பேரேடு (நாணய சங்கம்) | ... | 3-50 |
| 9. | ,, ,, (பண்டசாலை) .... | ... | 6-00 |
| 10. | கடன் இடாப்பு | ... ... | 3-00 |
| 11. | அங்கத்தவர் இடாப்பு | ... | 1-50 |
| 12 | காசுப்புத்தகம் (நாணய சங்கம்) | ... | 5-00 |
| 13. | ,, (பண்டசாலை) .... | ... | 7-00 |
| 14. | சிட்டைப்புத்தகம் பண்டசாலை 20/13 | ... | 3-00 |
| 15. | ,, ,, 18/1 | ... ... | 7-00 |
| 16. | ,, ,, 6/1 | ... ... | 3-00 |
| 17. | மனேஜர் பிணைப்பத்திரம் | .. ... | -20 |
| 18. | பொருள் பேரேடு (பண்டசாலை) | ... | 6-00 |
| 19. | அங்கத்தவர் மனுப்பத்திரம் ... | ... | -03 |
| 20. | பங்கு இடாப்பு | ... ... | 3-50 |
| 21. | பங்குப் பணச் சிட்டை | ... . | 1-00 |
| 22. | விலைபொருள் இடாப்பு | ... ... | 3-50 |
| 23. | உப-விதிகள் ப. நோ. கூ. சங்கம் | ... | -40 |
| 24. | விவசாயக் கடன் மனுப்பத்திரம் | ... | -05 |
| 25. | விவசாயக் கடன் முறி | ... ... | -06 |
| 26. | விவசாயக் கடன்—இணைப்பு i | ... | -03 |
| 27. | விவசாயக் கடன்—இணைப்பு (புத்தகம்) ii | ... | 6-75 |
| 28. | விவசாயக் கடன்—இணைப்பு iii | ... | 3-00 |
| 29 | விவசாயக் கடன்—இணைப்பு iv | .. | 3-30 |
| 30. | நெசவுச் சங்க உபவிதி | ... ... | -40 |
| 31. | ப. நோ. கூ. ச. காசுப் புத்தகம் புதியது | ... | 6-00 |
| 32. | விற்பனைச் சிட்டை 8/1 | ... .. | 3-50 |
| 33. | சமாசங்களின் கணக்குமுறை | ... | 3-50 |
| 34. | ப. நோ. கூ. ச. சமாச உபவிதி | ... | -45 |

## வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை

**காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1681

## இந்த இதழில்

ஆசிரியர் தலையங்கம் ... ... 3

இந்நாட்டுக் கூட்டுறவு வளர்ச்சியைப் பெருமைப்படுத்தும் நிகழ்ச்சி 5

கூட்டுறவுக் கல்விக் குழுத்தலைவர் பயிற்சி —பண்டிதர் ஆசிநாதர் 14


கடவுள் இயற்கை மூலசக்தி மட்டுந்தானு ? —மு. ஆழ்வார்ப்பிள்ளை 16

உண்மை ஒடுகிறது *(குட்டிக்கதை)* —சசிபாரதி 19

அன்பனின் அன்பளிப்பு —''கரவைக்கபூர்'' 21

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களா அல்லது ஒரு நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களா —R. C. S. குக். தமிழில்: து. சி 24

பாலர் பக்கம் ... ... 29



**வலி. கிழக்கு வாழைக்குலை விற்பனவுச் சங்கத் தலைவர் திரு. மு. வேலாயுதர் கூட்டுறவுக் கொடியை ஏற்றி திறப்புவிழாவை ஆரம்பித்து வைத்தார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகத் திறமையானவை

# பவர்ஸ்

உரங்கள் - கிருமிநாசினிகள் - திரவம் தெளிக்கும்,
பொடி தூவும் இயந்திரங்கள்.

- புகையிலை
- வெங்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- தென்னை
- வாழை

மற்றும் பழமரங்களை

இலாபகரமாய்ப் பயிரிடுக.

❁ ❁ ❁

கிடைக்குமிடம்:—

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்

111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கியதீபம்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

ஆசிரியர்: து. சீனிவாசகம், B. A., J. P.

மலர் 24 | யாழ்ப்பாணம் 1968 புரட்டாதி | இதழ் 1


## கூட்டுறவு விசாரணைக்குழு

மகாதேசாதிபதி தனது சிம்மாசனப் பிரசங்கத்தில் கூட்டுறவு இயக்கத்தினைப் பரிசிலனை செய்வதற்கும், இயக்கத்தினைத் திருத்தியமைப்பதற்கும் அதனை முன்னேறச் செய்வதற்கும் ஒரு விசாரணைக்குழு நியமிக்கப்படுமென எடுத்துரைத்ததற்கிணங்க அரசாங்கம் செயலாற்றத் தொடங்கியிருக்கிறதென அறிந்து அகமகிழ்கின்றோம். கூட்டுறவு இயக்கம் இந்நாட்டில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தொண்டாற்றி வருகிறது. நாட்டின் முன்னேற்றம் எவ்வகையில் இருக்கவேண்டுமென்பதைக் கருத்தில் வைத்து கூட்டுறவு இயக்கம் எவ்விதம் இருக்கவேண்டுமென ஒரு திட்டம் இதுவரைகாலமும் வகுக்கப்படவில்லை. இலங்கைக் கூட்டுறவு ஆணையாளர்களும் மந்திரிமாரும் வெளிநாடுகளில் பார்த்து வந்தவற்றை அவ்வப்போதைக்குகந்த முறையில் இங்கு கொணர்ந்து புகுத்தி உருவாக்கப்பட்டதே இலங்கைக் கூட்டுறவு இயக்கமாகும். அரசாங்கம் இப்போதாயினும் ஒரு விசாரணைக்குழு நியமிக்கத் தீர்மானித்து, செயலில் ஈடுபடத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பதினுயிரம் கூட்டுறவுச் சங்கங்களும் பதினெட்டு இலட்சம்கூட்டுறவாளர்களும் இச்சங்கங்களில் அங்கத்தவர்களாக இருந்து வருகிறுர்கள். தென்கிழக்காசியாவில் கூட்டுறவு இயக்கத்தில் இத்தகைய வளர்ச்சி பெற்ற நாடுகள் ஒருசிலவே. இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஜனநாயக சோசலிச முன்னேற்றத்திற்கும் இவ்வியக்கத்தினைப் பயன்படுத்துவதே சாலச்சிறந்ததாகும். இப்போது இயக்கத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களை ஆராய்வதும், அவை எவ்விதம் நாட்டின் வளர்ச்சிக்கு உதவுகின்றனவென அறிவதும் அடுத்துவரும் இருபத்தைந்து முப்பது ஆண்டுகளுக்குக் கூட்டுறவுத் துறைமூலம் இலங்கையின் முன்னேற்றம் எவ்வண்ணமிருக்க வேண்டுமென ஒரு முடிவுக்கு வந்து அதற்குத் தேவையான சிபார்சுகளைச் செய்வதுமே நியமிக்கப்படவிருக்கும் விசாரணைக் குழுவின் பெரும் பணியாகும்.

இப்பெரும் பணியைச் செய்து முடிக்கக் கூடிய ஆற்றல் படைத்தவர்களே விசாரணைக் குழு அங்கத்தவர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும். இக்குழுவில் நாட்டின் அனுபவமுள்ள உண்மைக் கூட்டுறவாளர்களும், கூட்டுறவு இயக்கம் நன்ருக வளர்ந்திருக்கும் நாடுகளிலுள்ள திறமையான கூட்டுறவாளர்களில் ஒருசிலரும், வேறுதுறைகளிளீடுபட்ட திறமைவாய்ந்தவர்களில் ஒருவரோ இருவரும் இக்குழுவில் அங்கம் வகிப்பது வேண்டற்பாலது. அரசாங்கமும், அரசியல் தலைவர்களும் ஜனநாயக முறைப்படி மக்களின் ஆலோசனையைக் கேட்டு விசாரணைக் குழுவின் அங்கத்தவர்களை நியமனம் செய்வது வரவேற்கத்தக்க தொன்ருகும்.

மேலே எடுத்துக் கூறப்பட்டமுறையில் ஒரு தகுதிவாய்ந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு அக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைக்குக் கொண்டுவந்து பொருளாதார சுபீட்சத்தையும், ஜனநாயக சோசலிசத்தையும் இலங்கை கூடியவிரைவில் அடைவதற்கு எம்மாலானவற்றைச் செய்வோமாக.

---

வெப்பத்தால் தவிக்கின்ற பூமியில் மழை நீர் வீழ்ந்து வெப்பத்தைத் தணிப்பதுபோல அல்லல்படும் சமுதாயத்தின் கொடிய பிணியை நீக்க எழுத்தாளது பேஞவிலிருந்து நல்ல எழுத்துக்கள் பிறக்கவேண்டும். —காந்திஜி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நாட்டுக் கூட்டுறவு வளர்ச்சியைப் பெருமைப்படுத்தும் நிகழ்ச்சி!

—"நவரசம்"


வடபகுதியில் கூட்டுறவு தலைசிறந்து விளங்குகின்றது என்ற எல்லோரினது புகழுரையை எடுத்துக்காட்டும் மங்காத சின்னமாகவும், வடபகுதியில் தலைசிறந்த கட்டிடம் என்ற ஏற்றமிகு பெருமையையும் வடபகுதிக் 'கூட்டுறவாளரின் மாளிகை' என்ற மாண்பினையும் பெற்றுத்திகழும் வ. ஐ. மே. சபையின் புதிய செயலகம் இங்குள்ள கூட்டுறவாளர் நீண்ட நாட்களாகக் கண்டுவந்த கனவு பலித்த அழகுக்காட்சி, இன்பக்காட்சி என்று கடந்த இதழில் எனது இதயம் உங்களுடன் பேசியது! எமது கூட்டுறவாளர் கட்டியெழுப்பிய அந்த மாளிகையின் திறப்பு விழாவின் அழகினைப்பற்றி ஓரளவாவது வாசகர்களுக்கு இங்கு எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

மாலை 5 மணி, 'கூட்டுறவாளர் மாளிகை' என்று நாம் இனிக்கப் பேசி மகிழ்வு கொள்ளும் வ. ஐ. மே. சபையின் புதிய செயலகம் மலர்களாலும், மகரதோரணங்களாலும், கூட்டுறவுக் கொடிகளா



இசைமணி மோகனாம்பிகை கணேசனின் கூட்டுறவுக் கீதத்துடன் விழாக்கூட்டம் ஆரம்பமாகியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வ. ஐ. மே. சபைத்தலைவர் திரு. இ. இராசரத்தினம்
வரவேற்புரை நிகழ்த்துகின்றார்**

லும் அலங்காரம் பெற்று மங்கலப் பொலிவும், மங்கல ஒலியும் மலிந்து காட்சியளிக்கிறது. கூட்டுறவுப் பெரியார்கள், அறிஞர்கள் யாவரும் விழாவின் எழில்காணக் குழுமி நிற்கின்றனர்.

''ஓங்கி எழும் கொடியே'' என்று இசைமணி மோகனாம்பிகை கணேசன் பண்ணிசைக்க, திரு. மு. வேலாயுதர் (வலி. கிழக்கு வாழைக்குலை விற்பனவுச் சங்கத் தலைவர்) கூட்டுறவுக் கொடியை ஏற்றுகிறார். ''படபட''வென மக்களின் கைகள் ஒலிக்கின்றன. ''படபட''வென காற்றில் ஏறிய கொடியும் துடிக்கின்றது.

சர்வதேச கூட்டுறவு இணைப்புத்தாபனத்தின் பிரதேச அதிகாரி திரு. P. E. வீரமன் குத்துவிளக்கை ஏற்றி செயலகத்தினைத் திறந்து வைக்கிறார். விசாலமான வீரசிங்கம் மண்டபத்தில் மக்கள் நிறைந்துவிட்டார்கள். நவீன வசதிகள் பொருந்திய அழகான மேடையில் தலைவர், பேச்சாளர் அனைவரும் அமர்கின்றனர். இசைமணி மோகனாம்பிகை கணேசனின் கூட்டுறவுக் கீதத்தின் பின்பு வ. ஐ. மே. சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ''வடபகுதிக் கூட்டுறவாளருக்கு இத் திறப்புவிழா ஒரு பெருநாளாக விளங்குகின்றது. அதுமாத்திரமல்ல, என் சொந்த வாழ்க்கையிலும், வடபகுதிக் கூட்டுறவின் வரலாற்றிலும் இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. வீரமன் உரையாற்றுகின்ருர்


நாள் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும்'' என்று அவர் தன் பேச்சிலே குறிப்பிட்டார்.

திரு. வீரமன் பேசுகையில், ''தென்கிழக்காசியாவில் கூட்டுறவு வளர்ச்சியில் இலங்கை போற்றத்தக்க பெருமையினைப் பெற்றுள்ளது'' எனக் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில், வ. ஐ. மே. சபையின் புதிய கட்டிடம் இங்குள்ள கூட்டுறவாளரின் கனவு நனவாகிவிட்டது என்பதைக் காட்டுகிறது என்றும், ஆதலால் இந் நாட்டின் கூட்டுறவு வளர்ச்சியினைப் பார்த்துப் பெருமை கொள்ளத்தக்க நிகழ்ச்சியாக இத்திறப்பு விழா திகழ்கின்றது என்றும் அதனுல் புதிய செயலகத்தினைத் திறந்து வைப்பதில்தான் பெருமை கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: ''கூட்டுறவு அல்லாதன காலப்போக்கில் அழிந்துவிடும் என்பது திண்ணம். அமரர் வீரசிங்கம் போன்ருேரின் உழைப்பால் மலர்ந்த இந் நிறுவனம் இளைஞர்களையும் கவர வல்லது. கூட்டுறவில் அவநம்பிக்கையுள்ளவர்களுக்கும் மனக்கசப்புக் கொண்டவர்களுக்கும் கூட்டுறவின் உண்மையான மகத்துவங்களைப் புலப்படுத்துவது கூட்டுறவில் உழைப்பவர்களது கடமையாகும். எதிர்காலத்தில் கூட்டுறவிற்குத் தலைமை தாங்குவதற்கு இளைஞர்கள் தயாராக வேண்டும்''

அமரர் வீரசிங்கத்தின் பெயர் சூட்டப்பட்ட அந்த அழகு மண்டபத்தில் அன்னாரின் திருவுருவப்படம் சிலாபம்—புத்தளம் கூட்டுறவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் வீரசிங்கம் அவர்களின் திருவுருவப் படத்தை
திரு. ககாவித்த திரை நீக்கஞ்செய்கிருர்

மாவட்ட சமாசத் தலைவர் திரு. D. A. P. ககாவித்த அவர்களால் திரைநீக்கம் செய்யப்பட்டது. அவர் உரையாற்றுகையில் ''அமரர் வீரசிங்கம் கூட்டுறவு இயக்கத்தின் தந்தை. எனது குரு. வடபகுதிக் கூட்டுறவாளரின் குரு'' என்ருர். மேலும் அவர் உரையாற்றுகையில், ''அமரர் வீரசிங்கம் கூட்டுறவுப் பண்புகள் நிறைந்தவர். அவைக்கேற்ப வாழ்ந்தவர். அவர் இட்ட கூட்டுறவு அத்திவாரத்தில் இலங்கை கூட்டுறவு இயக்கத்தினை வழி நடாத்திச் செல்ல வேண்டும். வ. ஐ. மே. சபைக்குச் சொந்தமான ஒரு கட்டிடம் வேண்டும் என அவர் அன்று கண்ட கனவு இன்று பலித்து விட்டது'' என்ருர்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேணன் அபேசேகரா பேசுகையில், ''பழங் கட்டிடங்களும், புதிய கட்டிடங்களும் நிறைந்துள்ள யாழ்ப்பாணத்தை நோக்கும் போது அது கட்டிடக்கலை ரீதியாகக் கட்டிடச் சாம்பாராக விளங்குகின்றது'' என்ருர். ''கட்டிடக்கலை ரீதியாக யாழ்ப்பாணத்தைச் சீர்படுத்துவது இன்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்
திரு. K. S. பொன்னுத்துரை அவர்கள்
உரை நிகழ்த்துகின்றார்

மையாதது. அதை இக்கட்டிடம் நிறைவேற்றியுள்ளது'' என அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் உரையாற்றுகையில் ''கூட்டுறவு இயக்கம் உயிர்வாழ வேண்டுமேயானால் இளைஞர் முன்னுக்கு வந்து அதற்குத் தலைமை தாங்க வேண்டும்'' என வலியுறுத்தினார்.

''கூட்டுறவு இயக்கத்தினால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை என்பதை வ. ஐ. மே. சபையின் அரிய முயற்சியால் எழுந்து நிற்கும் இக்கட்டிடம் காட்டுகின்றது. இதன் மூலம் இங்கு கூட்டுறவுத் துறையில் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது'' என சிரேஷ்ட உதவி கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. K. S. பொன்னுத்துரை பேசுகையில் குறிப்பிட்டார், ''கூட்டுறவின் சக்தி தன்னிகரற்ற மாபெரும் சக்தி. அச்சக்திதான் இக்கட்டிடம்'' என அவர் மேலும் பேசுகையில் எடுத்துரைத்தார். குமாரி லீலா நாராயணனின் கண்கவர் நடனங்கள் அனைவருக்கும் நல்விருந்தாக அமைந்தன. கருத்து வெள்ளம் பொங்க, கலை வெள்ளம் பொங்க, கூட்டுறவாளர் உள்ளம் பொங்க மங்கலம் பொங்கிய பெருவிழாவாக இத்திறப்பு விழா அமைந்தது! அவ்விழா இரவிலே, மின்சார ஒளியால் அழகு புனையப்பட்ட அப்புதிய செயலகத்தினை பண்ணைக் கடலோரத்தில் நின்று பார்த்தேன். ஆகா! அது சொர்ண மாளிகையாக, சொர்க்க மாளிகையாக என்னை கிறங்க வைத்துவிட்டது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார் பராசக்தியிடம் வேண்டிய வரங்களை வடபகுதிக் கூட்டுறவாளர் இன்று பெற்றுவிட்டார்கள் என்று கடந்த இதழில் குறிப்பிட்டேன். வரங்களை வேண்டிய பாரதியார், "காற்று வெளியிடையே அம்மா உந்தன் காவலுற வேண்டும்" என்று கடைசியாக மனமுருகப் பராசக்தியை வேண்டினார். பாரதியார் கேட்ட வரங்களைப் பெற்று இந்த பிரமாண்டமான, அழகான செயலகத்தின் உரிமையாளராக விளங்கும் வடபகுதிக் கூட்டுறவாளரும், "காற்று வெளியிடையே அம்மா உந்தன் காவலுற வேண்டும்" என்று பிரார்த்திக்கின்றனர்.



**கட்டிடக்கலைஞர் திரு. V. S. துரைராஜாவுக்கு தலைவரால் தங்கப்பதக்கம் அணியப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கிருஷ்ணா நீ பேகனே பாரோ" என்ற பாட்டிற்கு குமாரி லீலா நாராயணன் ஆடிய பரதநாட்டியத்தை நமது புகைப்படக் கலைஞரின் கண்கள் புதிய கோணத்திலிருந்து நோக்கின. அவரின் கமராவின் 'ஒளிக்கண்க'ளும் ஒருமுறை நோக்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குமாரி லீலா நாராயணன் ஆடிய குச்சுப்புடி நடனத்தில் ஓர் எழில்மிகு தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடனவிருந்தளித்த குமாரி லீலா நாராயணனுக்கு வ. ஜ. மே. சபை உபதலைவர் திரு. R. C. S. குக் பரிசளிக்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுக் கல்விக் குழுத்தலைவர் பயிற்சி

பொல்கொல கூட்டுறவுக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற கல்விக் குழுத்தலைவர்களுக்கான பயிற்சி பற்றிய விவரங்கள் இங்கு பாடல்களாகத் தரப்படுகின்றன.

**பாடியவர்:** பயிற்சிபெற்ற பண்டிதர் ஆசிநாதர்

## கூட்டுறவுக்குறள்

கூட்டுறவே பேராற்றல்; கூட்டுறவே வாழ்வின்பம்
கூட்டுறவே வாழ்வுக் குயிர்.

1 நாட்டுயர்வைக் கருத்தாகக் கொள்ளு கின்ற
நாமறிந்த இயக்கங்கள் பலவற் றுள்ளும்
கூட்டுறவு இயக்கமதே முதன்மை யாகும்
குறிக்கோளாய் இதைப்பரப்பச் செய்வ தற்காய்
நாட்டிலுள்ள அறிஞர்களை ஒன்று கூட்டி
நயமான பயிற்சிதரப் பொல்கொல் லையில்
மேட்டிமையாய் நடைபெற்ற பான்மை எண்ணி
மெய்யாகப் பெருமையுற வேண்டுந் தானே

2 ஆண்டறுபத் தெட்டான மூன்றும் வாரம்
அறிவுக்குழுத் தலைவர்க்குப் பயிற்சி தந்தார்
யாண்டுமுள காரியாதி காரர் சார்பில்
ஒவ்வொருவர் பொல்கொலையிற் கூடினர்கள்
ஈண்டுணவு உறையுளெலாம் வசதி செய்தார்
இணக்கமுற அமைப்புமுறை இயற்றிவைத்தார்
தூண்டிவிடக் கூட்டுறவுத் தளமே தந்தார்
துயர்குறைக ளில்லாமற் பயிற்றி வைத்தார்
சாணவும் பிரிவின்றிக் கலந்து வாழ்ந்தோம்
சிங்களர்கள் தமிழர்முஸ்லீம் குடும்ப மானோம்.

3 எண்பதின்மர் பயிற்சியினிற் கலந்து கொண்டார்
இலங்கையெங்கு மிருந்திங்கு வந்து சேர்ந்தார்
பெண்மணிகள் இவர்களுளே எழுவ ராவர்
பெருமையுற ஒருவாரப் பயிற்சி பெற்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணியமாய்ச் சிங்களர்கள் தமிழர் முஸ்லீம்
கலந்துண்டு உறவாடிப் பழகிக் கொண்டோம்
புண்ணியஞ்செய் தோமென்று பெருமை யுற்றோம்
புத்தூக்கம் பலபெற்றோம் புதுமை யாமே!

4 இங்கெல்லா ஒழுங்குகளும் இனிதே யாக
இராசகுரு அதிபரவர் இயற்றி வைத்தார்
தங்ககுண ஆசார்கள் போதித் தார்கள்
தக்கபடக் காட்சிகளும் காண்பித் தார்கள்
மங்களமாய்ப் பெரியோரின் உரையும் கேட்டோம்
மதிப்பான நிலையங்கள் பார்வை யிட்டோம்
பங்கமெதும் நிகழாமற் பாடக் கேட்டோம்
பயிற்சிதனை முழுமையுறப் பெற்றோம் பெற்றோம்

5 வந்தோரைக் குழுமுறையிற் பிரித்து வைத்து
வகுத்ததிட்டப் படியறிவு புகட்டி னார்கள்
சிங்களர்க்கு மூன்றுகுழு வகுத்திட் டார்கள்
செந்தமிழர் முஸ்லீம்கள் குழுஒன் றேனும்.
முந்துமிந்தத் தமிழ்வகுப்புப் பயிற்சி தன்னை
முருகேசப் போராசான் நடத்தி வைத்தார்
விந்தையுற ஜெகநாதன் உதவி செய்தார்
வெற்றியுற முழுப்பயிற்சி நிறைவே றிற்றே.

6 தமிழ்வகுப்பார் பத்துடனே ஒன்ப தாவர்;
தகுயாழூர்ப் பகுதியினர் ஐவ ராவர்;
அமிழ்தான திருமலையார் நால்வ ராவர்;
அடுத்தமட்டு நகராரும் நால்வ ராவர்;
வவனியாப் பகுதியினர் இருவ ராவர்;
வருசிலாப புத்தளத்தார் இருவ ராவர்;
சவிசம்மாந் துறைமுசலிஒவ் வொருவ ராவர்;
முஸ்லீம்கள் இவர்களிலே நால்வ ராவர்;

7 அதிபரொரு பெருவிருந்து அருந்தத் தந்தார்
அவ்வேளை பாராட்டுச் செய்தோம்; நன்றித்
துதிகூறிப் பிரிவதிலே துயரங் கொண்டோம்
தூங்காது இராப்பொழுதைக் கழித்தே விட்டோம்
விதிமுறையாய்க் கலைநிகழ்ச்சி காட்டி வைத்தோம்
விருப்பாகப் புகைப்படமும் எடுத்துக் கொண்டோம்
இதுபெரிய வரலாறாய் நிலைக்கும்; எங்கும்
ஒத்துழைப்புக் கொள்கையினை ஒளிரச் செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் இயற்கை மூலசக்தி மட்டுந்தானு?

—மு. ஆழ்வார்ப்பிள்ளை

கடவுள் இயற்கையில் இணைந்து இயற்கையாக இயங்குகிருர் என்பது முந்திய கட்டுரைகளால் அறியக் கிடந்தது. ஆகவே கடவுளை இயற்கைச் சக்தியென்று கூறிஞல் சரிதானே. அப்படியிருக்க அப்படிக் கூருது கடவுள் என்று வேறு சொல்லால் அழைப்பது ஏனென்று சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

இயற்கையின் இயக்கத்தில் சக்தி கட்டுப்பாட்டுக்கு அமைய இயங்குகிறது. இவ்வரம்பிற்கு உட்பட்டுத்தான் இயற்கை இயங்குகிறது. ஆஞல் உலக உற்பத்தியை நாம் கருத்திற் கொண்டு ஆராயும் பொழுது முன்னிதழில் கூறிய உதாரணத்தின் படி இயற்கையுள் இயங்கும் சக்தி கோழியிலிருந்து முட்டையையோ முட்டையிலிருந்து கோழியையோ தான் உண்டாக்கமுடியும். இன்ஞெரு பொருளிலிருந்து கோழியையோ முட்டையையோ உண்டாக்கும் சக்தி இயற்கைக்கில்லை. இப்படியான உற்பத்தி ஆதியில் உண்டாகி இருக்கவேண்டும். கோழி முட்டை இவ்விரண்டையும் பொறுத்த அளவில் முட்டையையாவது கோழியையாவது இன்ஞெரு பொருளிலிருந்தோ அல்லது கண்ணுக்குத்தெரியாத சக்தியிலிருந்தோ உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த புதுமாதிரியான அதாவது இயற்கைக்கமையாத செயலைச் செய்து இயற்கைவழி நடக்க விட்ட ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி இருக்கவேண்டு மல்லவா? அதுதான் கடவுள். ஆகவே கடவுள் இயற்கைக் கப்பாலுள்ள சக்தி, அது உலகைச் சிருட்டி செய்து தானே இயற்கை சக்தியாய் இயற்கைக்குள்ளும் அமைந்து இயங்கும் சக்தி:-

கடவுளைப்பற்றி மிகவும் விரிவாய் துலக்கமாய் விளக்கமாய் தாயுமானவர் கூறுகிறார். அதைக் கீழ்க்கொடுக்கிறேன் வாசித்துப்பாருங்கள்.

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குள்ளே அகிலாண்ட
கோடியெல்லாம்தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய் தழைத்த
தெதுமனவாக்கினிற்தட்டாமல் நின்றதெது சர்வ கோடிகளெ
லாம் தந்தெய்வம் எம்தெய்வம்என் றெங்கணும்
தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லதொரு சித்தாகி என்றைக்கு முள்ளதெது மேல்
கங்குல் பகலற நின்றஎல் லையுள சத்து
கருத்திற் கிசைந்த ததுவே கருதென லாமோ.

அங்கே இல்லை, இங்கே யுண்டு. இங்கேயில்லை அங்கேயுண்டு என்று சொல்லாதபடி எங்கும் ஒளிப்பு மறைப்பில்லாது பிரகாசமாகவே (அதாவது எவருக்கும் தெரியாதபடி) (ஆனந்த பூர்த்தியாகி அதாவது) ஒரே விதமான தொடர்பான அசைவோடு சர்வ ஆத்மாக்களுக்கும் நன்மைபயக்கும் முறையில் எல்லாவிடமும் நிறைந்திருக்கின்ற பொருளெதுவோ.

தன்னுடைய (அருள் நிறைந்த) எல்லாவுயிர்க்கும் நன்மைதேடிக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தன் அருட்பிரதேசத்துக்குள் (நாம் கருத்துட்கொள்ளக் கூடிய வெளி முழுவதும் உட்பட) உலகத்திலுள்ள கோடானுகோடி ஜீவாத்மாக்களும் ஆதரவுடன் இருக்கும்படிக்கு அருள்புரிந்து (எவ்வாத்மாவிற்கும் அருள் புரியாது தள்ளிவிடுவதில்லை) உயிர்க்குயிராய் உடலுக்கு உயிர் உதவுவது போன்று உயிர்க்கு உயிராக உதவி. அதாவது உயிர் தழைத்து வளர ஆகவேண்டியன எல்லாம் தாமாகவே செய்துதவி வளர்ந்ததெந்தப் பொருளோ.

மனம்வாக்கு இவைகளில் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்று சந்தேகம் கொள்ளும்படி இவைகட்குத் தோற்று நின்ற பொருள் எதுவோ பிரகாசமாக நடைமுறை இருந்தாலும் இச்சக்தியைக் காணப்படுவதில்லை.

சர்வகோடி சனங்களெல்லாம் தம்முடைய தெய்வம், எம்முடைய தெய்வம் என்று தொடர்ந்து வாசித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும்படியாக உள்ள ஒரேயொரு தனிப் பொருளாய் பலரும் வெவ்வேறு பொருளாகத் தம்முடைய பொருளென வாதிடும் பொருளாக உள்ளது எது.

எவ்விடத்தும் பெரிதாக வழக்கத்திலிருக்கும் அதாவது எல்லாவிடத்து அசைந்து கொண்டிருக்கும் எல்லாவற்றிலும் மிகவும் வல்லமையுள்ளதாய் இயங்கும் என்றைக்குமுள்ள பொருள் எதுவோ? அழிவற்றபொருள் எதுவோ? இரவு பகலாய் அடைக்கப்பட்ட எல்லைக்கு அப்பாலுள்ள இடங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது எதுவோ அதுவே கருத்திற்கிசைந்த மூலப் பொருள் அதுவேயாகும்.

## கம்ப்யூட்டர் இயக்கும் தொழிற்சாலை

முழுக்க முழுக்க கம்ப்யூட்டர்களினாலேயே இயக்கப்படும் தொழிற்சாலை ஒன்று பிரிட்டனில் கட்டப்படுகிறது. இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் இந்தத் தொழிற்சாலை விரைவில் இயங்க ஆரம்பிக்கும். உலகிலேயே இப்படி முழுக்க கம்ப்யூட்டர்களால் இயக்கப்படும் முதல் தொழிற்சாலை இதுதான்! சாதாரண தொழிற்சாலைகளின் அளவில் ஆறில் ஒரு' பங்கு அளவுக்குத்தான் இந்தத் தொழிற்சாலை இருக்கும். ஆனாலும் உற்பத்தித் திறனில் அதே அளவில் இதுவும் இருக்கும். சாதாரணமாக ஒரு இயந்திரம் தயாரிக்க ஆகும் நேரத்தில் 20 இயந்திரங்களை இந்தத் தொழிற்சாலை தயாரித்துவிடும். உற்பத்திச் செலவில் 90 சத விகிதம் குறைந்துவிடும். இவைதான் இந்தத் தொழிற்சாலையின் சிறப்பு அம்சங்கள் இந்தத் தொழிற்சாலையில் ஆட்களும் இருப்பார்கள்—பெயரளவுக்கு. ஆனால் இயந்திரங்களை இயக்குவதெல்லாம் கம்ப்யூட்டர்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிக்கதை

# உண்மை ஓடுகிறது

சசிபாரதி

"ஆகா, மாரிகாலத்துப் பசும்புல் தரைபோல் வானம் எத்தனை பசுமையாயிருக்கின்றது! அதோ, சூரியனின் பசிய கிரணங்கள் பச்சைக்கடலைத் தழுவிக் கொள்ளுதல் ஒரு தாய் தன் செல்வக் குழந்தையை நோக்கிக் கரங்களை நீட்டுவதுபோலிருக்கின்றதல்லவா?

"வானத்திரை தனில்
வண்ணமாய் மஞ்சளை
அள்ளித் தெளித்தது யார்
—ஆஹா
அள்ளித் தெளித்தது
யார்"

என்று பாடிய கவிஞனின் விழிப்பார்வையை என்னென்று சொல்வது? பசுமையே வாழ்க. ஆகாயமெங்கும், சமுத்திரமெங்கும், பூமியெங்கும் பசுமையே நீ வாழ்க"

அந்தக் கடற்கரை மணலில் சாய்ந்துகிடந்த வண்ணம் இயற்கையிடம் நெஞ்சைப்பறிகொடுத்த நிலையில் இப்படிப் பிதற்றிக் கொண்டிருந்தான் ஒரு வாலிபன்.

சில அடி தொலைவில் வந்து அப்போதுதான் அமர்ந்த மற்றொருவன் காதில் இவ்வார்த்தைகள் மிகத்தெளிவாக விழுந்தன. நிலவு சுடும் என்கிற முட்டாள் யாராயிருக்குமோ என்று மனத்துள்ளே ஓர் ஏளனச் சிரிப்புடன் வாழ்த்தொலிவந்த திசையைத் திரும்பிப்பார்த்தான். மிகமெல்லிய கருநீலப் பட்டுத்துகிலை விரித்து அதன்மேல் கிடப்பதே போன்று மணற்பரப்பில் கால்களை நீட்டி ஒற்றைக் கையைத் தலைக்கு மிண்டு கொடுத்து பக்கவாட்டில் சாய்ந்து கண்ணில் கண்ணாடியுடன் அங்கு ஒருவன் படுத்திருந்தான். உட்கார்ந்திருப்பவன் தன்னைப் பார்ப்பதைக் கவனித்துக் கொண்ட அவன், சொன்னான்: "நண்பா, பச்சைப் பசேலென்று வானமும், கடலலையும் மணற்பரப்பும் எத்தனை அழகாயிருக்கின்றது பார்த்தாயா? அதோ, தமது பச்சை இறகுகளை விரித்து உதறியபடி கொக்குகள் பறப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை அழகு!" என்றான். அவன் பேச்சைக்கேட்டுக் 'கடகட' வெனச் சிரித்த மற்றவன் "முட்டாள்களை நண்பராக்கிக் கொள்வதில் நான் கடைசிமனிதன்" என்றான். "கருநீல வைரமணிகளைக் கொட்டி உருட்டுவதைப்போன்றிருக்கும் கடலின் அலைகளும், வைரக்கல் துகள்களைக் கருநீலமையில் தோய்த்தெடுத்துத் தெளித்துவிட்டாற்போன்று மின்னும் மணற் குறுணிகளும், முன்னூற்றறுபது பாகை சரிவட்ட அந்திச் சூரியன் சூழச் சமுத்திரத்தில் பாய்ச்சிக் கொண்டிருக்கும் கருநீல வண்ணக்கதிர்களும் பச்சை கொழிக்கின்றதென்கிறாயே, அப்பனே உனக்கு எந்த ஊரோ?" என அவன் மேலும் வினவினான். அவனும் கண்ணுக்குக் கண்ணாடி தரித்திருந்தான்.

இருவரிடையேயும் பேச்சு வலுவடைந்தது. இருவரும் எழுந்து கொண்டனர். "அந்தி வானத்தின் நிறம் பச்சை, பச்சை" என்று கத்தினான் ஒருவன். "மாலைச் சூரியனின் நிறம் நீலம்" என்றலறினான் மற்றவன்.

சற்றுத் தொலைவில் மணல் மீதிருந்து மாலைக் காற்றில் சுகம்பெற்றுக் கொண்டிருந்த ஒரு முதியவரின் அமைதியை இருவர் பேச்சும் கலைக்கவே, அவர்கள் பேச்சை அவர் கொஞ்சம் நிதானமாகக் கவனிக்கலானார். "பச்சை" என்கிறான் ஒருவன்; "கருநீலம்'' என்கிறான் மற்றவன். பேச்சு உச்சநிலையை அடைந்து பரஸ்பரம் தாக்கிக் கொள்ளும் அளவுக்கு நிலைமை மாறியது. கண்ணிலே கண்ணாடியெதுவுமின்றித் தனிமையிலிருந்த அந்த மூன்றாவது மனிதர், வானத்தையும், வெகுதொலைவிலே சமுத்திரத்தின் விளிம்புக்குச் சற்றுமேலே நின்று கொண்டிருக்கும் சூரியனையும் மணற்பரப்பையும் வெகு நிதானமாகப்பார்த்துவிட்டு மெல்லத் தமக்குள் சிரித்துக் கொண்டே எழுந்து நடக்கலானார். "ஒருதடவை இருவருமே தமது கண்ணாடிகளைக் கழற்றிவிட்டுப் பார்த்தாலென்ன? செம்பொற்தகட்டிலே மஞ்சளில் தோய்த்தெடுத்த முத்துக்களைக் கொட்டி உருட்டினாற்போன்று கடலலைகளும், சிவந்த மஞ்சள் சேலையின் முக்காட்டினூடே பொலிவும் பொற்றாமரை வதனம் போன்று அந்திச் சூரியனின் எழிலும்....'' என்று ஏதேதோ தமக்குள்ளேயே முணுமுணுத்தவாறு அந்த முதியவர் தமது நடையிலே வேகத்தைக் கூட்டிச் சென்றுகொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-P... ROAD
NALLUR, JAFFNA
No.

கவியரசர் தாகூரின் பூங்காவில்

# அன்பனின் அன்பளிப்பு

"கரவைக்கபூர்"

## 6

என் கவிஞனே! இதோ இந்த ஊதாரித்தனம் நிறைந்த வசந்த நாளின் இனிமையான ஒளியில் எவர்கள் தயக்கமின்றி விரைந்தேகி விடுகிறார்களோ, எவர்கள் வேகமாக ஓடிக்கொண்டே சிரிப்பொலிக் களிப்புடன் பின்னோக்கிப் பாராமல் முன்னேறிச் செல்கின்றனரோ, எவர்கள் நியாயத்திற் கமையாத மட்டற்ற மகிழ்ச்சி பொருந்திய காலத்தில் மலர்ந்து, கண நேரத்திலேயே சிறிதளவும் விசனமின்றி மறைந்து விடுகிறார்களோ, அத்தகையவர்களைப் பற்றியே நீ கீதமிசைப்பாயாக!

நீ மட்டும் உன் பழைய மகிழ்ச்சிகளையும் கவலைகளையும் மணி மணியாய்ச் சொல்வதற்காக, மௌனமாகச் செயலற்று இருக்காதே! கடந்து போன இரவில் மலர்களிடமிருந்து உதிர்ந்து போன இதழ்களைப் பொறுக்கி எடுப்பதில் தாமதியாதே! உன்னை விட்டு விலகிச் செல்லும் பொருட்களை வீணே தொடர்ந்தலையாதே! வெட்ட வெளிச்சமாகத் தெளிவு படாதனவற்றின் கருத்தை அறிய ஆவல் படாதே! உன் வாழ்க்கையிலுள்ள இடைவெளிகளை அப்படியே விட்டு விடு. அவற்றின் ஆழத்திலிருந்து இசையமுதம் பீறிட்டெழுந்து வரும்.

## 7

இப்போது என்னிடம் எஞ்சியிருப்பது மிகவும் சொற்பமே. ஏனையவை யாவும் ஒரே ஒரு கவலையற்ற கோடையிலேயே செலவாகி விட்டன. எஞ்சியிருப்பது உனக்கு ஓர் கீதமிசைக்கமட்டும் போதியளவாயுள்ளது. மலரிணைப்பாகக் கோர்த்து உன் மென் கைக்கு ஒரு வளையலாயமையப் போதுமானது. ஓர் வட்ட வடிவமான சிவந்த முத்துப் போல் உன் காதிலிருந்து தொங்க விடப் போதுமானது. ஓர் நாணம் கலந்த இரகசியப் பேச்சுப் போல—ஓர் அந்தி வேளை சூதாட்டத்தில் பணயமாக வைத்தாடி பூரணமாக இழந்து விடுவதற்குப் போதுமானளவே, இப்போது மிகுதியாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் படகு சிறியது, மென்மையானது பலமற்றது. மாரிகாலத்தில் பொங்கி எழும் கட்டுக் கடங்காப் பேரலைகளைக் கடப்பதற்கு உதவாத படகு என் படகு. நீ மட்டும் லாவகமாக அதில் ஏறிக் கொள்வாயானால், நான் உன்னைக் கரையோரத்தின் பாது காப்பான இடங்களிலே, கருநீல நீரின் சிற்றலைகள், கனவுகளினால் சலனப்படுத்தப்பட்ட நித்திரை போலிருக்கு மிடங்களிலேயே—எங்கே தொங்கும் கிளைகளிலிருந்து புறுக்களின் அகவல் நண் பகலின் நிழல்களைத் தூக்கம் படிந்ததாகக் காட்டுகின்றதோ — அவ்வழிகளிலேயே என் படகைச் செலுத்திக் கொண்டு அதிக கவனமாய்ப் பிரயாணம் செய்வேன் - அந்தி மங்கும் வேளையிலே, தண்ணீர் சொட்டும் அல்லி மலரை உன் கூந்தலில் அணிந்து களைப்புற்றிருக்கும் உன்னிடமிருந்து விடைபெற்றுக் கொள்வேன்.

8

உனக்கும் என்படகில் இடமுள்ளது. நீ தன்னந்தனியே சில நெல்லுக்கட்டுகளுடன் மட்டுமே இருக்கிறாய். என்படகு பாரம்நிறைந்தும், கூட்டம் அதிகமாகவுமிருக்கிறது. எப்படியிருப்பினும் என்படகில் உனக்கு இடமில்லையென எப்படி என்னால் மறுக்க முடியும்? உன் உடல் இளமை பூரித்துக் கொடிபோல் ஆடி அசைகிறது. உன்கருவண்டுக் கண்களின் கோடியில் சுழன்றாடும் புன்னகைமின்னி மறைகிறது. உன் உடைகள் மாரி முகில் போல் அழகான வர்ணங்களாலாயது.

பிரயாணிகள் வெவ்வேறு இடங்களில் இறங்கி தத்தம் இல்லங்கட்குச் சென்று விடுவார்கள். நீ சிறிது நேரம் என் படகின் முகப்பில் உட்கார்ந்திருப்பாய். பிரயாணத்தின் முடிவில் உன்னை ஒருவருமே தடுத்து நிறுத்த மாட்டார்கள்.

நீ எங்கே போவாய்? உன்நெற் கட்டுகளைச் சேமித்து வைப்பதற்காக எந்த வீட்டிற்குப் போவாய்? நான் இதையிட்டு உன்னிடம் வினவமாட்டேன். ஆனால் என் படகின் பாய்களை அவிழ்த்துப் படகைக் கரையில் கட்டியபின், நான் அந்திவேளையில் தனியே உட்கார்ந்து உன்னைப்பற்றியே எண்ணமிடுவேன். நீ எங்கே போகிறாய்—எந்த வீட்டில் உன் நெற்கதிர்க் கட்டுக்களைச் சேமித்து வைக்கிறாய் என எண்ணிக் கொண்டேயிருப்பேன்.

9

பெண்ணே! நீ கொண்டு செல்லும் கூடைமிகவும் பார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது, உன் உடலோகளைப்படைந்து விட்டது. எவ்வளவு மிகப்பெரிய இலாபமடையும் ஆவலுடன் நீ இவ்வளவு தூரப் பிரயாணத்தை மேற்கொண்டுள்ளாய்? வழியோ மிகமிக நீண்டது, பாதை சூரிய வெப்பத்தில் தகிர்கிறது.

இதோ பார்! காகத்தின் கண்கள் போன்ற கருநீலத் தண்ணீர் இந்த ஆழமான குளிர்ந்த குளத்தில் நிறைந்திருக்கிறது. குளக்கரை இரண்டும் சரிவாய்ப் பசும்புல்லால் நிறைந்து பூப்போல மெத்தென இருக்கிறது.

வா! உன் களைப்படைந்த பாதங்களை இந்தத் தண்ணீரில் நனைத்துக் கொள். மதிய வேளையில் வீசும் மென் காற்று உன் கூந்தலைத் தன் தண்விரல்களால் கோதிக் கொடுக்கும். புறாவினங்கள் தங்கள் தாலாட்டுப் பாட்டுக்களை இன்னிசைக்கும். இலைகள் தங்கள் நிழல்களிடை நிறைந்திருக்கும் இரகசியங்களைச் சலசலக்கும்.

காலம் மணிக்கணக்காய்ச் சென்று சூரியன் அஸ்தமனமாகி விட்டால் தான் என்ன? வெறிச் சென்றிருக்கும் நிலப்பரப்பினிடை அமைந்துள்ள பாதை மங்கி வரும் சூரிய வொளியில் மறைந்து விட்டால் தான் என்ன?

அதோபார்! தொலைவில் பூத்துக் குலுங்கும் மருதோன்றி மரங்களின் வேலி அமைப்புக்கப்பால் என் இல்லம் உள்ளது. நான் வழிகாட்டி உன்னை அங்கே அழைத்துச் செல்கிறேன். என் இல்லத்தில் தீபமேற்றி, உன் களைப்படைந்த உடம்பு இளைப்பாற ஓர் படுக்கை அமைத்துக் கொடுக்கிறேன். உசை வேளையில், ஆவினங்களில் பால் கறக்கும் சலசலப்பால் புள்ளினங்கள் துயில் நீக்கும் நேரத்தில் நான் உன்னை துயில் எழுப்பி வைப்பேன்!

## 10

இதோ இந்தக் கண்ணுக்குப் புலப்படாத பாதைகளைத் தொடர்ந்து செல்லும் தேனீக்களை, அவைகளின் கூடுகளிலிருந்து வெளியேறத் தூண்டிய அந்த சக்தி எது? அவைகளுடைய ஆவல் நிறைந்த இறக்கைகளின் தாபம்தான் என்ன? மலர்களின் உயிர் நிலையின் ஆழத்தில் உறங்கும் கீதத்தின் இசை இத்தேனீக்களுக்கு எப்படிப் புலனாகிறது? நாணத்துடன் மௌனமாய் மலரிடை தேன் உறைந்திருக்கும் இடத்தை அடைவதற்கு, இத்தேனீக்களுக்கு எப்படி வழி தெரிகிறது?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களா அல்லது ஒரு நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களா?

R. C. S. குக்
தமிழில்: து. சி.

### பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் குறைபாடுகள்:

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய குறைபாடுகள் இவையென எடுத்துரைத்தல் வேண்டும். தொடர்ந்து வியாபாரம் செய்யும் பெரிய கூட்டுறவுப் பண்டசாலை ஒரு போகத்திற்குத் தனியே வியாபாரஞ் செய்யும் சிறிய கூட்டுறவுப் பண்டசாலையைக் காட்டிலும் திறமையான முகாமையாளரை அமர்த்தக்கூடியதாக இருக்கும். ஆயின் அனேக துறைகளில் வியாபாரஞ் செய்யும் ஒரு பெரிய பலநோக்குக் கூட்டுறவுப் பண்டசாலைக்கு, சிறிய பண்டசாலையைக் காட்டிலும் மிகத் திறமை வாய்ந்த முகாமையாளர் தேவைப்படும். எல்லா நாடுகளிலும் திறமையான முகாமையாளர் பயிற்சி, முகாமை ஆற்றல் ஆகியவை பெறுவதற்கு இயலாது இருக்கிறது. விசேஷமாக இங்கிலேயின் தங்கி முன்னேறி வரும் நாடுகளில் நிலவுகின்றது. கிராமப் புறங்களில் திறமை வாய்ந்த முகாமையாளர்களை எடுப்பது அரிது. உயர்ச்சி கிடைக்கக் கூடிய பெரிய பட்டினங்களிலேயே அவர்களைப் பெறுவது சுலபம்.

ஒரு ப. நோ. கூ. சங்கத்தில் அனேகமாக ஒரு துறை திருப்திகரமாக இருப்பதுடன் அத்துறை கணிசமான இலாபத்தையும் தரக்கூடும். இன்னுமொரு துறை சிறிய இலாபந் தரக்கூடியதாக இருக்கும். இன்னுமொரு துறை நஷ்டத்தைத் தருவதாகவும் இருக்கும். நஷ்டத்தில் ஓடும்

துறையை, இலாபத்திற்கு நடைபெறும் துறையிலிருந்து பெற்ற இலாபத்தால் சரிக்கட்டுவோமென்ற எண்ணம் முகாமையாளரையும் நிருவாக சபையாரையும் தூண்டும். இந்நிலை நீண்ட காலம் நிலவுவதாயின் சங்கம் முறியுமளவிற்கு வந்துவிடும். இந்நிலைக்கு வந்துவிடாவிட்டாலும் தூரத்திலிருந்து தமது உற்பத்திப் பொருள்களைக் கொடுத்துதவுகின்ற கமக்காரர்கள் தங்களுக்குரிய போனசைப் பெற இயலாதவர்களாக இருக்கும். ஏனெனில் போனசாகக் கொடுக்கக் கூடிய இலாபத்தை அக்கிராமத்திலுள்ளவர்கள் நஷ்டத்தில் ஓடும் பாவனைப் பொருள்களின் வியாபாரம் விழுங்கிவிடக்கூடும். இது அங்கத்தவர்கள் சங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பாதிப்பதாகும். அங்கத்தவர்களுடைய வைப்புப் பணத்தை நஷ்டம் விளைவிக்கும் துறைகளில் உபயோகிப்பின் ஆபத்தான நிலை ஏற்பட்டுவிடும்.

**பாதுகாப்புக்கள்**

நன்றாக நடாத்தப்படும் ப. நோ. கூ. சங்கங்கள் மேலே எடுத்துரைக்கப்பட்ட குறைபாடுகள் ஏற்படாவண்ணம் தடுப்பதற்கும் சுயமாகவே சில முறைகளைக் கையாளுகின்றன. ப. நோ. கூ. சங்கங்கள் கடன் கொடுக்காதும் சேமிப்புக்களை ஏற்காது விடுதல் ஒருமுறையாகும். எல்லா அங்கத்தவர்களும் நன்மையடையக் கூடிய சேவைகளையே ஆற்றிவருதல் இன்னொரு முறையாகும். உதாரணமாக ஒரு சிலரே செய்து வரும் கோழி வளர்த்தலை அவர்களைக் கொண்ட தனித்தாபனத்திடம் விட்டுவிடுதலாகும். எல்லாப் பகுதிகளின் கணக்குகளைத் தனித்தனியாக வைத்தல் மிக முக்கியமானதாகும். முகாமையாளரும் நிருவாகசபை அங்கத்தவர்களும், அவர்கள் மூலம் சாதாரண அங்கத்தவர்களும், ஒவ்வொரு பகுதியும் இலாபத்தில் நடக்கின்றதாவென அறிவதற்கு இம்முறை உதவியாக இருக்கும்.ஒரு பகுதி அடுத்தடுத்து இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு நஷ்டத்திற்கு ஓடுமானால் அப்பகுதி திருப்பி அமைக்கப்படுதல் வேண்டும். அல்லது மூடப்படுதல் வேண்டும்.

ப. நோ. கூ. சங்கம் கூழாம்பாணியாக இல்லாதிருக்க வேண்டுமாயின் ஒவ்வொரு பகுதியினது கணக்கும் வெவ்வேறாக எழுதப்படுதல் அத்தியாவசியமாகும். சாதாரண கணக்கு எழுதுபவர் இத்துறையில் பயிற்சி பெறாதவரானதால் இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டமாக இருக்கும். ஆயின் உற்பத்தியாளருக்குக் கொடுக்கும் சம்பளத்தையும் அவர்களது பொருள்கள் விற்பனையாகியபணத்தையும் கணக்கிடுதல் சிரமமானதல்ல. ஆயின் அங்கத்தவர்களுக்கு உரம், வெண்ணெய் தயாரிக்கும் பகுதிக்குப் பொட்டணமாக்கும் பொருள்கள், உப்புகொண்டு செல்லும் லொறி, அங்கத்தவர்களது பொருள்களைப் புகையிரத நிலையத்திற்குக் கொண்டு செல்லும் செலவு ஆகியவற்றைக் கணக்கிடுவது தான் கஷ்டம். விற்பனையை எழுதிவரும் கணக்கு பாவித்த பெற்ரேல், சாரதி செலவளித்த நேரம், திருத்துபவர் செலவழித்த நேரம், இன்சூரன்சுக்கும் சென்ஸ்சுக்கும் ஏற்பட்ட செலவு ஆதியவையெல்லாம் விற்பனைக் கணக்கு தாங்கியிருத்தல் வேண்டும். இத்தகைய பிரச்சினை மேலும் மேலும் வந்து கொண்டேயிருக்கும். விகிதர்கள், வேலையாட்கள், பொதுமுகாமையாளர் ஆதியோரது சம்பளம், மத்தியக் காரியாலயப் பாவிப்பு, களஞ்சிய இன்சூரன்ஸ் ஆதியவற்றின் வீதங்களை ஒதுக்கும் பொழுது பிரச்சினை மிக சிக்கலாகின்றது. ஆயின் அது செய்து முடிக்கலாம். தனிநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகளைக் காட்டிலும் நிபுணத்துவமும் செலவும் கூடிய கணக்குகளை அது கொண்டுள்ளது.

ஒரு கிரமத்தில் சகல வியாபாரங்களையும் செய்வதற்கு ஏகபோக உரிமை கொடுக்கப்பட்ட ப.நோ.கூ சங்கத்தைப் பற்றி ஓர் எச்சரிக்கை இங்கு கொடுக்கப்படுதல் வேண்டும். அனேகமாக அச்சங்கம் அக்கிராமத்திலுள்ள அங்கத்தவர்களுக்கும் அங்கத்தவரல்லாதாருக்கும் வியாபாரஞ் செய்து வருகிறது. அதன் சேவையைப் பெறுபவரில் பலர் கூட்டுறவில் ஒரு சிறு அக்கறையும் இல்லாதவர்களாக இருக்கின்றனர். இது கூட்டுறவுக் கொள்கைக்கு முரணானதுடன் சங்கத்தின் திறமையான சேவையையும் பலவீனப்படுத்துகிறது.

## முடிபுகள்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமா அல்லது ஒருநோக்குக் கூட்டுறவுச் சங்கமா திறமையானது என முடிபுக்கு வருதல் இக்கட்டுரையின் நோக்கமன்று. வளர்ச்சியடைந்துவரும் நாட்டிலுள்ள ஒரு கிராமத்திற்கு எது பொருத்தமானது என அறிய உதவி செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கூட்டுறவைப் பற்றி ஆராயும் பொழுது உண்மையில் இல்லாத இலட்சியங்களைப் பற்றி ஆராய்தல் ஒவ்வாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாட்டிலும், சில வேளை ஒரு தேசத்தில் ஒவ்வொரு பகுதியிலும் கூட்டுறவில் சிறு வித்தியாசம் காணப்படும். அந்நாட்டின் புவியியல், காலநிலை, அங்கத்தவர்களாக இருக்கும் மக்கள், அவர்களது பொது அறிவு, நுண்கலையறிவு, அவர்களது சமூக பாரம்பரியம், அவர்களது சமயம் ஆகியவை ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்குமிடையேயுள்ள கூட்டுறவின் வித்தியாசத்திற்குக் காரணங்களாகும். மக்கள் கிராமங்களில் சீவிக்கிறார்களா? அல்லது சிதறுண்டு சீவிக்கின்றார்களா; அவர்களிடத்தில் தலைமை எப்படி விருத்தியடைகிறது, என்ன பயிர்கள் உற்பத்தி செய்கிறார்கள், அவற்றை எங்கு விற்கிறார்கள், நாட்டின் வர்த்தக, தொழில், பணங்கொடுக்குந் தாபனங்களின் வளர்ச்சிநிலை ஆதியவையும் சிறு சிறு வித்தியாசத்திற்குக் காரணங்களாகும். சில குறித்த நிலைகளில் சிலவகைக் கூட்டுறவுச் சங்கச்கள் வெற்றிகரமாகத் தொழிற்பட்டு, புதிய துறைகளில் விருத்தியடைந்து வளர்ச்சி பெறுஞ் சக்தியைக் காட்டாநிற்கின்றன.

அதே நிலைகளும் பிரச்சினைகளுமுள்ள மற்றைய நாடுகளிலும் அத்தகைய கூட்டுறவுத் தாபனங்கள் வளர்ச்சியடையுமென்று கூறுவது பொருத்தமாகும். ஒரே மாதிரியான நிலைகள் இன்னொரு நாட்டில் நிலவுவது அருமையில் அருமையாகும். இயற்கை அல்லது சமுதாய நிலைகளில் சிறுமாற்றங்கள் புதியமுறைக் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்க வேண்டிய அவசியகத்தை உண்டுபண்ணக் கூடும். சுயாதீனம், சமத்துவம், சுயாட்சி, இலாபம் பெறும் நோக்கமில்லாமை, கல்வி ஆகிய அடிப்படைக் கொள்கைகளை எல்லாக் கூட்டுறவுத் தாபனங்களும் கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டியவையாகும். இவற்றிற்குக் குந்தகம் விளைவிக்கும் சக்திகளைக் களைந்தெறிதல் வேண்டும். ஆயின் அவை காட்சியளிக்கு ரூபங்கள் நாட்டுக்கு நாடு வித்தியாசிப்பதாகும். கூட்டுறவு முறை ஆச்சரியப்படக்கூடிய முறையில் வளைந்து கொடுக்கக் கூடியதொன்றாக இருக்கிறது. தீர்வு காண வேண்டிய பிரச்சினையில் உள்ளவர்களுக்கு ஏதோ ஒரு கூட்டுறவுத் தாபனம் வழிகாட்டியாக இருந்து வருகிறது. அவர்கள் அதனைப் பின்பற்றித் தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். தங்கள் தேசத்திற்கும் மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குக்கும் இணங்க புதியமுறைகளையும், தருணத்திற்குத் தகுந்த முறையில் செய்கை முறைகளையும் கையாண்டு, அசல் கூட்டுறவுத் தாபனத்தை நடாத்துபவர்களாக வந்து விடுவர். கூட்டுறவுத் தாபனம் புதிய முறைகளை வகுப்பதற்குச் சக்தி வாய்ந்தது என்றும் அதற்கு இயற்கையான முறையில் அது தொண்டாற்றச் சுயாதீனம் இல்லாவிடின் பயனற்றுப் போய்விடுமென்றும் கருத்தில் வைக்கவேண்டியது முக்கியமாகும்.

(முற்றும்)


# வருடாந்தக் கூட்டுறவு மகாநாடு

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின்
31-வது வருடாந்தக் கூட்டுறவு மகாநாடு
ஒக்டோபர் 27, 28-ம் திகதிகளில்
யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டிருக்கும்
மேற்படி சபையின் புதிய கட்டிடத்திலுள்ள
**வீரசிங்கம் மண்டபத்தில்**
நடைபெறும்.

பாரத கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர்
**யுவராஜ் உதயபான் சிங்கி**
பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இம்மகாநாட்டில்
அகில இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத் தலைவரும்,
கூட்டுறவு ஆக்க ஆணையாளரும்
கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

அன்பான மருமக்களே!

இவ்விதழில் **செல்வி சகுந்தலை சிவஞானம்** எழுதிய **கூட்டுறவின் நன்மைகள்** என்னும் கட்டுரையும் **செல்வன் தனிநாயகன்** எழுதிய **ஒருமுட்டி காணுது** என்னும் சிறு கதையும் வெளியாகின்றது.

இங்ஙனம்,
அன்பான,
**கூட்டுறவு மாமா**

# கூட்டுறவின் நன்மைகள்

செல்வி சகுந்தலை சிவஞானம்

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற பழமொழிகள் நம் நாட்டில் அன்ருடு வழங்கப்படுகின்றன. ஒருவர் ஒருவராகப் பிறந்தும் குடும்பத்தில், பாடசாலைகளில், சமுதாயத்தில் பலராகக் கூட்டமாகத்தான் வாழ்கின்ருேம். ஒரு நாட்டின் அல்லது ஒரு சமுதாயத்தின் அரசியல் பொருளாதார, கலாச்சாரநிலை தனித்தொரு மனிதன் நிலையைக் கொண்டு கணக்கிடப்படுவதில்லை. அந்நாட்டின் அல்லது மக்கள் எல்லோருடைய நிலை கொண்டே மதிப்பிடப்படுகிறது. இதனுல் ஒரு சமுதாயம் சுபீட்சமாக வாழவேண்டுமென்ருல் மக்கள் எல்லாத் துறைகளிலும் கூட்டு வாழ்க்கையை மேற்கொள்ளல் வேண்டும். மக்கள் தொகை பெருகி வரும் இந்நாளில் வாழ்க்கைச் செலவு விஷம்போல ஏறிக் கொண்டே வருகின்றது. எதிலும் போட்டி பொருமைகளும், இருட்டுச் சந்தை வியாபாரமும், பெருகிக் கொண்டே வருகின்றது. சிலர் சுரண்டுகின்ருர்கள். பலர் சுரண்டப் படுகிருர்கள். ஒரு சிலர் பணத்தை மேலும் பெருக்கிக்கொண்டே இருக்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலை மாறி மனிதகுல மக்களாக இல்லாமல் மக்களாக வாழ ஒரே வழிதான் கூட்டுறவு இயக்கம்! மனிதனோடு மனிதனும் இன, மத, மொழி வேற்றுமை இன்றி ஏழை, பணக்காரன் உள்ளவன், இல்லாதவன் என்ற வேற்றுமையின்றி பரஸ்பர ஒற்றுமையோடுவாழ ஒரேயொரு மருந்து கூட்டுறவு இயக்கம்.

கிராமங்களில் கள்ள வியாபாரிகளும், சிறிய கடைக்காரர்களும், பொருட்களை இரட்டிப்பு விலைக்கு விற்று அதிக பணம் சம்பாதிக்கிறார்கள். ஏழை மக்கள் செய்த கைத்தொழில் விவசாயப் பொருட்களைத் தரகர்களும் உள்நாட்டு வியாபாரிகளும், குறைந்தவிலைக்கு வாங்கி ஏழை மக்களை ஏமாற்றுகிறார்கள். இலங்கையின் வரண்ட பிரதேசங்களிலும், கிராமப்புறங்களிலும், ஏழை விவசாயிகள் கடன் பழுவாலும் வறுமையாலும், புழுக்கள் போலத் துடிக்கின்றனர். பணம் படைத்த முதலாளிகள் இவர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்து குடியிருக்கும் வீட்டையும், பயிர் செய்யும் நிலத்தையும் கூட அபகரித்துக் கொள்வதற்குத்தான் கூட்டுறவு இயக்கம் தோன்றியது.

அதிக லாபம் பெறவேண்டும் என்ற நோக்கமும் போட்டி மனப்பான்மையும் இல்லாது வாழ்க்கையில் அதிக வசதிகளைப் பெறாத வறியோர்க்கு நியாய விலையில் பொருட்களை விநியோகிப்பதற்கே கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின. இலங்கையில் வரண்ட பிரதேசங்களில் தொடங்கப் பட்டிருக்கும் கூட்டுறவு விவசாயத் திட்டங்களும், குடியேற்றத் திட்டங்களும் ஏழை விவசாயிகளுக்கோர் வரப்பிரசாதமாகும். ஒல்லாந்து. டென்மார்க், போன்ற நாடுகள் விவசாயத்துறையில் முன்னணியில் நிற்பதில் பெருந்துணையாய் நிற்பன. அங்கு செழித்தோங்கி வரும் கூட்டுப் பண்ணைகளாகும்.

கூட்டுறவுச் சங்கங்களில் ஒவ்வொரு அங்கத்தவரும் சங்க இழையங்களில் பங்கு பெறுவதற்கும், ஒரு சிலரின் கவனயீனம் சங்கம் முழுமைக்கும் அறிவைத் தேடித் தருவதாலும் கூட்டுறவு இயக்கம் மக்களுக்குச் ஜனநாயகத் தத்துவத்தைத் பயிற்றுவதற்கு நல்லதோர் சாதனமாக விளங்குகிறது. மேலும் இவ்வியக்கத்தில் தலைவர், காரியதரிசி, பொறுப்பாளர், பொருளாளர், கணக்குப் பரிசோதகர் போன்ற பல நிருவாக உறுப்பினர்களைக் காலத்துக்குக் காலம் தெரிந்து எடுக்க வேண்டி இருப்பதால் கிராம மக்கள் அரசியல் அடிப்படை ஒழுங்கைப் பயிலுகிறார்கள். பலர் பொறுப்பு வாய்ந்த பகுதிகள் வகுத்து உள்நாட்டு ஸ்தாபனங்களாகிய கிராமசபை, நகரசபை, மாநகரசபைகளிலும் ஏன் பாராளுமன்றத்திலும் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த பதவிகளை வகிக்கப் பழகிக் கொள்கிறார்கள்.

பொதுமக்களில் "இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன" என்றிருக்கும் சோம்பேறிகளைக்கூடச் சமுதாயம் நன்மை தீமைகளில் கவனமாக உற்சாகத்துடனும் இருக்கக் கூட்டுறவு இயக்கமே தூண்டுகோலாக அமைகிறது. கூட்டுறவுச் சங்கங்களிற் சேர்ந்த அங்கத்தவர்கள் பல்வேறு இன, மத, மொழி நிறவேற்றுமை உள்ளவர்களாய் இருந்தும் அது அவர்களிடையே ஒற்றுமையும் பரஸ்பர நல்லெண்ணத்தையும், வளர்த்து வருவதைக் காண்கின்றோம். அதற்கு மேலாக சமூகத்தில் வறியநிலை உள்ளோரின் பொருளாதார நிலையை உயர்த்தவும் ஒரு ஏணி போல் அமைந்துள்ளது இவ்வியக்கம்.

சில சமுதாயத் துரோகிகளின் சீர்கேட்டால் இது சிறிது நலிவடைந்து இருப்பது உண்மை இவ்வித சில போலி நிருவாகிகளும், அதிகாரிகளும் ஒழிந்து அன்பின் அடிப்படையில் எழுந்த கூட்டுறவு இயக்கம் "ஓங்கி வளர்க" என்று வாழ்த்துகின்றேன்.

# ஒருமுட்டி காணாது

தனிநாயகம்

ஓர் ஊரில் கந்தன் என்னும் குடியானவன் இருந்தான். அவனுக்குப் பசு மாடு வளர்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அவன் ஒரு நாகு கன்றை வாங்கி வளர்த்தான். நன்றாகப் புல், புண்ணாக்கு, வைக்கோல் முதலியன போட்டு வளர்த்தான். நாகு கன்று வளர்ந்து வந்தது.

அதே ஊரில் இராமன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரு நாம்பன் மாடு வாங்கிச் சவாரி செய்ய வேண்டும் என்று ஆசை. அவனும் ஒரு நாம்பன் கன்றை வாங்கி நல்ல உணவு போட்டு வளர்த்து வந்தான்.

கந்தனது பசுக்கன்று வளர்ந்து ஒரு நல்ல அழகான கன்றை ஈன்றது. கந்தன் புதிதாக ஒரு முட்டி வாங்கி பால் கறக்கப்போனான். முட்டியைக் கீழே வைத்துப் பால் கறக்கத் தொடங்கும் போது மாடு காலால் அடித்தது. முட்டி துண்டாக சில்லம் சில்லமாகப் பறந்தது. அப்படிப் பல முட்டிகள் உடைந்தன. கந்தன் தான் ஒரு நாம்பன் மாடு வளர்த்திருந்தால் நல்லாயிருந்திருக்கும் என்று யோசித்தான். இந்த மாட்டை விற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வேறு எருது வாங்கவும் தீர்மானித்து விட்டான்.

இராமன் தனது காளைக்கு நல்ல நாட்பார்த்து நுகம் பூட்ட எத்தனித்தான். மாடு திமிறிக் கொண்டு ஓடியது. நுகம் பூட்ட எவ்வளவு பாடுபட்டும் மாடு விடவில்லை. அவன் களைத்துப் போனுன். ஒரு பசு மாடு வாங்கியிருந்தால் இப்பொழுது பாலாவது கறந்து குடிக்கலாம் என்று எண்ணினுன். தனது எண்ணத்தைச் செயலில் காட்ட எத்தனித்தான்.

ஒரு நாள் கந்தனும் இராமனும் தங்கள் தங்கள் மாடுகளைத் துரத்திக்கொண்டு வந்தார்கள். இருவரும் ஓரிடத்தில் சந்தித்தார்கள். கந்தன் தான் வைத்திருக்கும் மாட்டை விற்கப்போவதாகவும் ஒரு எருது வாங்கப் போவதாகவும் கூறினுன். இராமன் தானும் தனது எருதை விற்கப்போவதாகவும் தனக்கொரு பசுமாடு வேண்டும் என்றும் கந்தனுடைய பசுமாடு எப்படியென்றும் கேட்டான்.

அதற்குக் கந்தன் "ப்பூ! எனது மாட்டில் பால் கறக்க ஒரு முட்டி காணுது; இந்தக் காளை மாடு எப்படி?" என்று கேட்டான்.

அதற்கு இராமன் "ப்பூ! எனது மாடு நுகம்பூட்ட விடாது. அவ்வளவு சுறுசுறுப்பு" என்ருன்.

இருவரும் தங்கள் மாடுகளை மாற்றிக்கொண்டு சென்ருர்கள்.

இருவரும் போகும்போது ஒவ்வொருவரும் தான் மற்றவரை ஏமாற்றிக் கொண்டதாக எண்ணிப் பூரிப்புடன் போனுர்கள்.

## காந்திஜி நூற்ருண்டு!



1968ம் ஆண்டு ஒக்டோபர் 2ம் திகதி தொடக்கம் 1969ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையுமான காலத்தை காந்தி நூற்ருண்டாக அகிலமெங்கும் கொண்டாடுகின்றது. அக்காலத்தில் அந்த ஜீவகாருண்யசீலரின் எண்ணங்களை இந்த உலகம் கடைப்பிடித்து காலத்தால் அழியாத புதிய உலகமாகத் திகழும் ஆக.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண கூட்டுறவு மாகாண வங்கி

அறவிடப்பட்ட பங்கு ரூபா 191,495-00
சட்டரீதி அடக்கப்பணம் ,, 247,625-00
மற்றும் ,, ,, 414,662-00

*நிலையான வைப்புப் பணத்திற்கு*
*3, 6, 12 மாதங்களுக்கு*
*முறையே 1½, 2½, 3½ வீத வட்டி கொடுக்கப்படும்.*

**கவனிப்பு :-**

ஐந்து அல்லது மேற்பட்ட வருட வைப்புப் பணத்திற்கு
4 வீத வட்டியும்,

பத்து அல்லது மேற்பட்ட வருட வைப்புப் பணத்திற்கு
4½ வீத வட்டியும் கொடுக்கப்படும்.

☞ சங்க உத்தியோகஸ்தரின் பிணைப்பணத்திற்கு
3 வித தொடர் வட்டி கொடுக்கப்படும்.

பிணைப்பணம் வருடவீதம் புதுப்பிக்கப்படத் தேவையில்லை.
ஒரு மாதத்திற்குமுன் அறிவித்தல் கொடுத்தால் எடுக்கலாம்.
பணம் எடுக்கும் நாள் வரைக்கும் வட்டி கொடுக்கப்படும்.

**சேமிப்புப் பணத்திற்கு**
**3 சத வட்டி கொடுக்கப்படும்.**

விசேஷ கவனிப்பு :-

சேம வைப்பில் நாளாந்தம் பணம் எடுக்கவும்
போடவும் வசதி உண்டு.

பவுண் நகைகள் அடைவு பிடிக்கப்படும்; வட்டி வருடம் 9%
பாகம் பாகமாகக் கடனைக் கட்டி அடைவு மீட்க வசதியுண்டு.

**கிளைகள் :-**

யாழ்ப்பாணம், பரந்தன், சுன்னாகம், நெல்லியடி,
சாவகச்சேரி, சங்கானை, ஊர்காவற்றுறை,
வலி-கிழக்கு (ஆவரங்கால்)

**தலைமைக் காரியாலயம்: பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[Registred as a News paper in Ceylon, Regd. No. A 13]

# உருளைக்கிழங்கு உற்பத்திப்பெருக்கச் செய்கை

**1. விதைப்புக்குமுன்னர் தொற்றுநோயை நீக்கல்**

விதை கிழங்கைப் பீடிக்கும் தொற்று நோயை நீக்க, விதையை நாட்டும் முன்னர் **"செரசான்"** என்னும் வித்து தொற்று நோய் நீக்கியில் பரிகரித்துப் பாவித்தல் நலம். ஒரு அவுன்ஸ் **"செரசான்"** தொற்று நீக்கியை 5 கலன் நீரில் கலந்து — 28 இருத்தல் உருளைக் கிழங்கைப் பரிகரிக்கலாம்.

**2. பிற்கூற்று வெளிறல் நோய் [Late Blight]**

இந்நோய் ஒரு வகை பங்கசினால் உண்டாகின்றது. இதைக் கட்டுப்படுத்த **"அன்றக்கோல்"** 1½ இருத்தல் 50—60 கலன் நீரில் கலந்து இலைகளின் மேற்புறமும், கீழ்ப்புறமும் நன்கு தோயும் வண்ணம் ஒரு ஏக்கருக்குத் தெளித்தல் வேண்டும்.

**3. ஆணைப் பேன்.** *(எப்பிலக்னோ வண்டு).*

உருளைக்கிழங்குச் செடியில் இருந்து இப்பூச்சியை அகற்ற

(1) பொலிடோல் E 605 — 1 அவுன்ஸ் 8 — 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும் அல்லது

(2) பொலிடோல் M — 1 அவுன்ஸ் 8—10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும் அல்லது

(3) பொலித்தியோன் — 1 அவுன்ஸ் 4 கலன் நீரில் கலந்து பாவிக்கவும்.

**கிழங்கைத் தாக்கும் அந்திப் பூச்சி**

இதை அழிக்க லெபேசிட் 50% ஈ. சி. 1 அவுன்ஸ்சை 5 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு 60 கலன் வீதம் தெளிக்கவேண்டும்.

**எறும்புகள்**

தோட்டத்தில் எறும்புகள் காணப்பட்டால் ஒரு அவுன்ஸ் லெபேசிட் 50% ஈ. சி.யை 4 கலன் நீரில் கலந்து பாவிக்கலாம். இந்தக் கரைசல் 400 அடிச் சாலுக்குப் போதுமானது.

கிடைக்குமிடம்:

**வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச்சமாசம்**

111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

Edited & published by T. SEENIVASAGAM, B.A., J.P. residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Northern Division Co-operative Federation, Ltd., Main St., Jaffna and printed at the N. P. Co-op. Ptg. & Pub. Socy., Ltd., Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org